வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=


# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07 08.05.2026 வெள்ளிக்கிழமை இதழ் : 122 பக்கங்கள் : 08




# 118 உறுப்பினர்களின் ஆதரவின்றி முதலமைச்சர் பதவியேற்பு இல்லை

## விஜய்க்கு தமிழக ஆளுநர் திட்டவட்டமான பதில்



சென்னை, மே. 08

தமிழகச் சட்டப் பேரவைத் தேர்தலில் 108 இடங்களைக் கைப்பற்றித் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்தபோதிலும், தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜயைப் பதவியேற்குமாறு அழைக்க ஆளுநர் ஆர்லேகர் மீண்டும் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

ஆட்சி அமைப்பதற்கான உரிமை கோரி நேற்று முன் தினம் ஆளுநரைச் சந்தித்த விஜய், நேற்று மீண்டும் ஆளுநர் ஆர்லேகரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, காங்கிரஸ் கட்சியின் 5 உறுப்பினர்களுடன் சேர்த்து மொத்தம் 113 எம்.எல்.ஏக்களின் ஆதரவு தமக்கு இருப்பதாக விஜய் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

எனினும், விஜய்க்குப் பதவிப்பிரமாணம் செய்து வைக்க ஆளுநர் இணக்கம் தெரிவிக்கவில்லை எனத் தெரியவருகிறது.

07

# விஜய்யை பதவியேற்பதற்கு அனுமதிப்பதே ஜனநாயகம்!

## ஆளுநரின் நடவடிக்கைக்கு அரசியல் தலைவர்கள் கண்டனம்

சென்னை, மே. 08

தமிழகச் சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களைக் கைப்பற்றிப் பெரும்பான்மை பலத்துடன் தனிப் பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள த.வெ.க. தலைவர் விஜயை, ஆட்சி அமைக்க ஆளுநர் அழைக்காதமைக்கு பல்வேறு தரப்பினரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

நேற்று இரண்டாவது முறையாகவும் ஆளுநரைச் சந்தித்த விஜய், ஆட்சி அமைப்பதற்கான உரிமை கோரலை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு. வீரபாண்டியன் விடுத்துள்ள அறிக்கையில், "பதவியேற்புக்கு முன்னரே பெரும்பான்மையை நிரூபிக்குமாறு ஆளுநர் வற்புறுத்துவது ஏற்றுக் கொள்ள முடியாதது.

அரசியலமைப்புச் சட்டத்தை மதித்து ஆளுநர் செயற்பட வேண்டும். விஜய் தனது பெரும்பான்மையைச் சட்டமன்றத்திலேயே (சபையில்) நிரூபிப்பதற்கு ஆளுநர் போதிய அவகாசம் வழங்க வேண்டும்" என வலி யுறுத்தியுள்ளார்.

07

# தமிழக ஆளுநருக்கு எதிராக இன்று மாபெரும் போராட்டம்!

சென்னை, மே. 08

தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியமைக்க தடையாக செயல்படுவதாக குற்றஞ்சாட்டி, ஆளுநரையும் மத்திய பா.ஜ.க. அரசையும் கண்டித்து இன்று முற்பகல் 11 மணிக்கு தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

2026 தமிழக சட்டமன்றத் தேர்தலில்

07

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் அதி உணர்வுபூர்வமான ஒரு பிரச்னை!

## வடக்கு மாகாண ஆளுநர் கருத்து

யாழ்ப்பாணம், மே. 08

வடக்கு மாகாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரம் என்பது வெறும் அரச திணைக்களங்களின் கோப்புகளில் உறங்கும் நிர்வாகச் செயல்முறை அல்ல் அது ஆயிரக்கணக்கான குடும்பங்களின் ஆறாத கண்ணீரும், நீண்டகாலக் காத்திருப்பும், விவரிக்க முடியாத துயரமும் கலந்த மிக உணர்வுபூர்வமான மனிதாபிமானப் பிரச்னையாகும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வு நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட செயலக

07

# பிரைட் ரைஸ் பிரியாணி விலை உயர்வு

கொழும்பு, மே. 08

பிரைட் ரைஸ், பிரியாணி மற்றும் நாசிகுரான் ஆகியவற்றின் விலையை நேற்று நள்ளிரவு முதல் 25 ரூபாவினால் அதிகரிக்க முடிவு செய்துள்ளதாக உணவக

07

# சர்வதேச ரீதியில் இலங்கைக்கு இராஜதந்திர நெருக்கடி அபாயம்!

## டிலான் பெரேரா எச்சரிக்கை

கொழும்பு, மே. 08

அரசாங்கத்தின் ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் முறைகேடான கேள்வி கோரல் நடைமுறைகள் காரணமாக, இலங்கை சர்வதேச ரீதியில் பாரிய இராஜதந்திர நெருக்கடிகளை எதிர்கொள்ளும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக டிலான் பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், பாராளுமன்றத்தில் சபாநாயகர் தற்போது நடுநிலையற்ற வகையில்

07

# தையிட்டி விகாரை பகுதியை பார்வையிட்டார் யாழ். ஆயர்!

யாழ்ப்பாணம், மே. 08

தையிட்டி பகுதியில் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் விகாரைப் பகுதியை, யாழ். மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை நேற்று முன் தினம் மாலை நேரில் சென்று பார்வையிட்டார்.

தையிட்டியில் பொதுமக்களின் பூர்வீக நிலங் களை ஆக்கிரமித்து இந்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, நிலத்தின் உரிமையாளர்கள்

07



# செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து 4 என்புக்கூடுகள் புதிதாக அடையாளம்!

யாழ்ப்பாணம், மே. 08

செம்மணி மனிதப் புதைகுழிக்குள் இருந்து நேற்று குழந்தைகளின் என்புக்கூடுகளுடன் நான்கு என்புக்கூடுகள் புதிதாக அடையாளம்

07

# 80 கோடி ரூபாவுக்கும் மேல் மாயம் ஜனாதிபதியும் அரசும் நித்திரையில்

## நாமல் ராஜபக்ஷ கடும் சாடல்

கொழும்பு, மே 08

நாட்டில் 80 கோடி ரூபாவுக்கும் அதிக பணம் மாயமாகியுள்ள போதிலும், ஜனாதிபதியும் அரசாங்கமும் இன்னும் தூக்கத்தில் இருப்பதாக பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹொரணையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு

07

# நயினாதீவு அம்மன் ஆலய உண்டியல் உடைத்து 21 இலட்சம் ரூபாய் திருட்டு!

## இரு சிறுவர்கள் உட்பட மூவர் கைது

யாழ்ப்பாணம், மே. 08

வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய உண்டியலை உடைத்து சுமார் 21 இலட்சம் ரூபாய் பணத்தைத் திருடிய குற்றச்சாட்டில் இரண்டு சிறுவர்கள் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாக பூசணி அம்மன் ஆலய உண்டியல் நேற்று முன் தினம் அதிகாலை உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் காலை ஊர்காவற்துறை

07

# கபில சந்திரசேனவை கைது செய்ய உத்தரவு

கொழும்பு, மே. 08

பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ள சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேனவைக்

07

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய் ஆட்சியமைக்க தி.மு.க. தடை போடாது!

**மு.க ஸ்டாலின் கூறுகிறார்**

சென்னை, மே. 08

தமிழக வெற்றிக் கழகம் ஆட்சியமைக்க திராவிட முன்னேற்றக் கழகம் எந்த வகையிலும் இடையூறாக அமையாது என அந்த கட்சியின் தலைவர் மு.க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்திய ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அரசியலமைப்பு நெருக்கடி அல்லது மற்றுமொரு தேர்தலை திராவிட முன்னேற்றக் கழகம் விரும்பவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, திராவிட முன்னேற்றக் கழகமும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்து கூட்டணி ஆட்சி அமைக்க இரகசியப் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளதா



க தகவல்கள் வெளியாகிய நிலையில் மு.க ஸ்டாலின் இந்த கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். (அ)

# விஜய்யின் வெற்றி மாபெரும் சாதனை

**சந்திரிகா வாழ்த்து**

கொழும்பு, மே. 08

தமிழக சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் சி. ஜோசப் விஜய்க்கு, இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துள்ளார்.

விஜய்யின் இந்த வெற்றியை மாபெரும் சாதனை என்று வர்ணித்துள்ள அவர், இது தொடர்பாக அனுப்பி வைத்துள்ள வாழ்த்துக் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளதாவது: -

“தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவி வரும் சுமூகமான மற்றும் ஆழமான உறவை நான் இந்தத் தருணத்தில் மகிழ்ச்சியுடன் நினைவுகூர்கின்றேன். உங்களது புதிய நிர்வாகத்தின் கீழ், இரு தரப்புக்கும் இடையிலான இந்த நட்பு ரீதியான உறவு மேலும் வலுவடைந்து தொடரும் என்று நான் பெரிதும் எதிர்பார்க்கின்றேன்.” - என்று சந்திரிகா குறிப்பிட்டுள்ளார். (அ)

# அநுரவை போல் பொய் கூறி ஆட்சிக்கு வந்துள்ளார் விஜய்!

**சாமர சம்பத் எம்.பி. கூறுகிறார்**

கொழும்பு, மே. 08

“இலங்கையிலுள்ள தற்போதைய அரசாங்கம் எப்படி பொய்களை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்ததோ அதே போன்றுதான் தமிழ்நாட்டில் விஜயும் பொய்களை அள்ளி வீசி ஆட்சிக்கு வந்துள்ளார். இறுதியில் அவருக்கு ஆட்சியை கொண்டுசெல்ல முடியுமாக இருக்குமோவென்று தெரியவில்லை” என்று புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்க வகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது சாமர சம்பத் எம்.பி மேலும் தெரிவிக்கையில்-

இப்போது தமிழ்நாட்டில் ஆட்சிக்கு விஜய் வந்துள்ளார். இவர் கச்சதீவை எடுத்துக்கொள்வாரோ தெரியாது. உங்களைப் போன்றுதான் விஜயும் பொய்களை அள்ளி வீசியுள்ளார். தங்கம் தருகிறேன், அதனைத் தருகின்றேன், இதனைத் தருகின்றேன் என்றெல்லாம் கூறியே விஜய் ஆட்சியைப் பெற்றுள்ளார்.

இங்குள்ள நிலைமையைப் போன்று விஜய்க்கும் தமிழ்நாட்டில் ஆட்சியை கொண்டுசெல்ல முடியுமாக இருக்குமோ தெரியவில்லை'-என்றார். (அ)

# லாப்ஸ் எரிவாயு விலை அதிகரிப்பு

கொழும்பு, மே. 08

நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் லாப்ஸ் சமையல் எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு கொள்கலன் விலை 545 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக 5700 ரூபாவாக இருந்த இதன் புதிய விலை 6,245 ரூபாவாகும்.

5 கிலோகிராம் எரிவாயு கொள்கலன் விலையானது 220 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக 2,280 ரூபாவாக இருந்த இதன் புதிய விலை 2,500 ரூபாவாக விற்பனை செய்யப்படவுள்ளது. (அ)

# டெங்கு நோய் பரவல் மீண்டும் தீவிரம் அபாய வலயங்களாக 6 மாவட்டங்கள்

கொழும்பு, மே. 08

நாடு முழுவதும் டெங்கு நோய் மீண்டும் தீவிரமாகப் பரவி வருவதாகவும், இந்த ஆண்டில் இதுவரை 13 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளதாகவும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் பணிப்பாளர் மருத்துவர் கபில கன்னங்கரா, மே 04ஆம் திகதி வரையான தரவுகளின்படி நாடு முழுவதும் 26,071 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தற்போது நான்கு மாகாணங்களில் நோய்த்தொற்றுகள் அதிகரித்து வரும் போக்கு காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான தொற்றுகளுடன் அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

விட்டுவிட்டுப் பெய்யும் மழையானது நுளம்பு பெருகுவதற்கு உகந்த சூழலை உருவாக்கியுள்ளமை நோய்ப் பரவலுக்கு முக்கிய காரணமாகும்.

பாடசாலை வளாகங்கள், வழிபாட்டுத் தலங்கள் , அரச அலுவலக வளாகங்கள் மற்றும் தனியார் வீடுகள் ஆகியவை நுளம்புகள் இனப்பெருக்கம் செய்யும் இடங்களாக கண்டறியப்பட்டுள்ளன.

இந்த வளாகங்களைச் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் டெங்கு மற்றும் சிக்கன்குனியா ஆகிய நோய்களைக் கட்டுப்படுத்த முடியும் என மருத்துவர் கபில கன்னங்கரா வலியுறுத்தியுள்ளார். (அ)

# ரங்க ராஜபக்ஷவின் மரணம் குறித்து ஆதாரத்துடனேயே நான் பேசினேன்!

**பொலிஸ் நிலையத்தில் சாட்சியங்களுடன் முன்னிலையாக தயார் என்கிறார் கம்மன்பில**

கொழும்பு, மே. 08

உயிரிழந்த நிதி அமைச்சின் அதிகாரி ரங்க ராஜபக்ஷவின் மரணம் தொடர்பில் அவரது மனைவி சந்தேகம் வெளியிட்டதாக தான் குறிப்பிட்ட விடயம் முற்றிலும் உண்மை என்றும், அதனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ கடித ஆதாரத்துடனேயே தான் முன்வைத்ததாகவும் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் சட்டத்தரணி உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரசாங்கம் என் மீது சுமத்தும் பொய்க் குற்றச்சாட்டுகளுக்கு அஞ்சப்போவதில்லை. எதிர்வரும் 9ஆம் திகதி குளியாப்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் சாட்சியங்களுடன் முன்னிலையாகத் தயாராகவுள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு-டாலி வீதியில் அமைந்துள்ள சுதந்திர கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற “மக்களின் குரல்” ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

ரங்க ராஜபக்ஷவின் மனைவியே மரணத்தில் சந்தேகம் இருப்பதாக முறைப்பாடு செய்தார் என்று ஆதாரத்துடனேயே நான் கூறினேன். செவ்வாயன்று ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்திய பொலிஸ் ஊடகப் பேச்சாளர், ரங்க ராஜபக்ஷவின் மரணம் சந்தேகத்திற்குரியது என அவரது மனைவி அறிவித்ததாக நான் கூறிய கருத்து பொய்யானது என்றும், இது தொடர்பில் வாக்குமூலம் பெறுவதற்காக என்னை குளியாப்பிட்டிய பொலிஸிற்கு அழைக்கவுள்ளதாகவும், பின்னர் குளியாப்பிட்டிய நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் என்னையும் ஜனாதிபதியைப் போன்ற ஒருவர் என்று நினைக்கிறார் போலிருக்கிறது. ஜனாதிபதியின் அளவுகோலால் என்னை அளந்து அவதூறு பரப்பவேண்டாம் என நான் அவரிடம் கேட்டுக்கொள்கிறேன். ஜனாதிபதி கற்பனைகளின் அடிப்படையில் கருத்துக்களை வெளியிடுகிறார், ஆனால் நாம் ஆதாரங்களின் அடிப்படையிலேயே கருத்துக்களை வெளியிடுகிறோம்.

2026 மே 1ஆம் திகதி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நான்கு வைத்தியர்களைக் கொண்ட குழுவொன்றை பிரேத பரிசோதனைக்காக நியமிக்கிறார். அந்த வைத்தியர்களுக்கு சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் ஆங்கிலத்தில் அனுப்பப்பட்ட கடிதத்தில், “குளியாப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பஹல வீரம்புவ பிரதேசத்தைச் சேர்ந்த நிஸ்சங்க ஆரச்சிலாகே சீலவதி, தனது கணவர் அபேசிங்க ஆரச்சிலாகே ரங்க நிஷாந்த ராஜபக்ஷ 2026.04.30 அன்று சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்துள்ளதாக அறிவித்துள்ளார்.“ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறெனில், ரங்க ராஜபக்ஷவின் மனைவி தனது கணவரின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்துள்ளமை நாட்டின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் அனுப்பிய கடிதத்திலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் பொய்யான கருத்தை வெளியிட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறிய போது, அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவருக்கு வலதுபுறம் அமர்ந்திருந்தவர் இதே சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் தான். நான் ரங்க ராஜபக்ஷவின் பிரேத பரிசோதனை பற்றித்தான் பேசினேன்.

எனவே, என் மீது குற்றம் சுமத்துவதற்கு முன்னால் இது குறித்து சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திடம் கேட்டிருந்தால் உண்மையை அறிந்திருக்கலாம்- என்றார். (அ)

# மேற்கு ஆசியப் பதற்றம் இலங்கை ஆழ்ந்த கவலை

கொழும்பு, மே. 08

மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள அண்மைய மோதல்கள் மற்றும் முக்கியமான எரிசக்தி உள்கட்டமைப்பு மீதான தாக்குதல்கள் குறித்து இலங்கை அரசாங்கம் தனது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தத் தாக்குதல்கள் பிராந்திய ஸ்திரத்தன்மையையும் அமைதிக்கான முயற்சிகளையும் பாதிப்பதாக உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிராந்தியத்தின் அமைதி மற்றும் பாதுகாப்பு குறித்து வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்தப் பிராந்தியத்தில் இலங்கை நாட்டவர்கள் உட்பட பெருமளவிலான வெளிநாட்டுப் பணியாளர்கள் வசித்து வருவதால், அவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு இலங்கைக்கு மிக முக்கியமானதாகும்.

பொதுமக்கள், முக்கியமான குடிமக்கள் உள்கட்டமைப்புகள் மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளின் பாதுகாப்பு மிகவும் அவசியமானது.

அனைத்துத் தரப்பினரும் அதிகபட்ச பொறுமையைக் கடைப்பிடிக்குமாறும், பதற்றத்தைத் தணிப்பதற்கு ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுமாறும் இலங்கை கேட்டுக்கொண்டுள்ளது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu 08.05.2026 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 25

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## இலங்கை பாராளுமன்றத்தில் விஜய்

தமிழ்நாடு சட்டசபை தேர்தலின் முடிவுகள் வெளியான மறுநாள் கடந்த செவ்வாய்க்கிழமை இலங்கை பாராளுமன்றம் கூடியது. சபை நடவடிக்கைகளின் நேரலை ஒளிபரப்பை தொலைக்காட்சியில் பார்த்துக்கொண்டிருந்த எவரும் தென்னிந்திய நடிகர் ஜோசப் விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகத்தின் தேர்தல் வெற்றியைப் பாராட்டுவதற்காக கொண்டுவரப்பட்ட பிரேரணை ஒன்றின் மீது உறுப்பினர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கிறார்களோ என்று நினைத்திருந்தால் அதில் தவறு இருக்க முடியாது.

செவ்வாய்க்கிழமையும் மறுநாள் புதன்கிழமையும் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட விடயம் வேறு எதுவாகவோ இருந்த போதிலும், விஜய் மீது புகழ்மழை பொழிவதற்கு கூடுதலான நேரத்தை பயன்படுத்தினார்கள். பொருத்தமான விடயத்தின் மீதுதான் உறுப்பினர்கள் உரையாற்றுகிறார்களா இல்லையா என்பதை சபாநாயகரோ, பிரதி சபாநாயகரோ அல்லது சபைக்கு தலைமை தாங்கும் ஏனையவர்களோ கவனிப்பதில்லை. விளங்கிறதோ இல்லையோ அவர்களும் கேட்டுக் கொண்ட இருந்துவிட்டு சம்பந்தப்பட்ட உறுப்பினருக்குரிய நேரம் முடியும் தறுவாயில் மாத்திரம் நினைவுபடுத்துகிறார்கள்.

வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகள், மலையக தமிழ் கட்சிகள் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்ற முஸ்லிம் கட்சிகளின் உறுப்பினர்கள் விஜய் அரசியலில் பிரவேசித்து இரு வருடங்களுக்குள் தேர்தலில் "வரலாற்றுச் சாதனையை" படைத்து விட்டதாக பாராட்டுக்களை தெரிவித்து மகிழ்ந்தார்கள்

இலங்கை தமிழரசு கட்சியின் உறுப்பினர்கள் குறிப்பாக, சிவஞானம் சிறீதரனும் சாணக்கியன் இராசமாணிக்கமும் தங்களது உரைகளில் இலங்கையின் இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வைக் காண்பதற்கு விஜய்யின் உதவியையும் ஒத்துழைப்பையும் கோரினார்கள். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான உட்பட மலையக உறுப்பினர்கள் மலையக தமிழ் மக்களின் சார்பில் விஜய்க்கு வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் தொப்புள் கொடி உறவுகளையும் நினைபடுத்தினர்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் விஜய்யின் சாதனைகளை வானளாவப் புகழ்ந்ததுடன் ஒரு படி மேலே சென்று மகாகவி பாரதியாரின் "சிந்து நதியின்மிசை நிலவினிலே..." கவிதையில் வரும் "சிக்களத் தீவினிற்கோர் பாலமமைப்போம்.... சேதுவை மேடுறுத்தி வீதிசமைப்போம்...." என்ற வரிகளை மேற்கோள் காட்டி விஜய் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கும் காலத்தில் தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்துக்கும் இடையில் பாலம் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பையும் வெளியிட்டார்.


அத்துடன் ஹக்கீம் நின்றுவிடவில்லை. தமிழ்நாட்டு கட்சிகளின் சார்பில் அந்த மாநிலத்தின் சட்டசபைக்கு மாத்திரமல்ல, இன்னொரு தென்னிந்திய மாநிலமான கேரளத்தின் சட்டசபைக்கும் பதிதாக தெரிவாகியிருக்கும் இஸ்லாமிய சகோதரர்களின் பெயர்களையும் ஒவ்வொன்றாக வாசித்து வாழ்த்துக்களை தெரிவித்ததை காணக் கூடியதாக இருந்தது.

அதேவேளை, ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சாமர சம்பத் திசாநாயக்க தற்போது இலங்கைக்கு சொந்தமானதாக இருக்கும் கச்சதீவை தமிழ்நாட்டுக்கு தருமாறு விஜய் கேட்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது என்று கூறினார். கடந்த வருடம் ஒரு தடவை கச்சதீவுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சென்றபோது தமிழ் நாட்டுக்கு கச்சதீவில் இருப்பதாக கூறப்படும் உரிமை பற்றி விஜய் தெரிவித்திருந்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தான் சம்பத் திஸாநாயக்க அவ்வாறு கூறினார் போலும்.

முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கு பிறகு சுமார் அரை நூற்றாண்டு காலத்தில் தமிழ்நாட்டில் மீண்டும் ஒரு சினிமா நடிகர் ஆட்சிக்கு வருவதற்கு வழிவகுத்ததுடன் ஆறு தசாப்தங்களாக திராவிட இயக்கத்தின் பிரதான இரு கட்சிகளும் மாறிமாறி ஆட்சிசெய்து மாநிலத்தின் அரசியலின் மீது கொண்டிருந்த மேலாதிக்கம் இந்த தடவை தகர்க்கப்பட்டிருக்கும் காரணத்தினால் மாத்திரமே வழமையை விடவும் இலங்கையர்களின் கவனம் பெருமளவுக்கு தேர்தல் முடிவுகள் மீது இவ்வாரம் திரும்பியது என்பதில் சந்தேகமில்லை.

விஜய்யின் வெற்றி இலங்கையுடனான தற்போதைய இந்திய உறவுகளிலோ அல்லது புதுடில்லியின் புவிசார் அரசியல் மூலோபாய அணுகுமுறைகளிலோ எந்த மாற்றத்தையும் கொண்டுவரப்போவதில்லை. என்றாலும், வடக்கு,. கிழக்கு தமிழ் மக்களுக்கு வீணான நம்பிக்கையையூட்டும் தமிழ் கட்சிகளின் பேச்சுக்களும் தென்னிலங்கை மக்களுக்கு வீணான பீதியையூட்டும் பெரும்பான்மையின அரசியல்வாதிகளின் பேச்சுக்களும் தொடரவே செய்யும்.

# ஜோசப் விஜய் அவர்களுக்கு ஒரு திறந்த மடல்



முதல்வராகப்போகும் சந்திரசேகர் ஜோசப் விஜய் அவர்களுக்கு,

வாழ்த்துகளும், உங்களது மகத்தான வெற்றிக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களும். உங்களுக்கு வாக்களித்த அந்த 30 சதவீத மக்களில் நான் ஒருவன் அல்ல. ஆனால், தேர்தல் முடிவுகள் வெளிவந்தபோது நான் உண்மையிலேயே திகைத்துப் போனேன். அதே சமயம் எனக்குள் ஒரு எண்ணம் ஓடியது: அவர் புதியவர், அதாவது அனுபவம் இல்லாதவர் அதன் பொருள் அவர் புத்துணர்ச்சியானவர், கறைபடாதவர்.

சில உண்மைகள் அவரிடம் சொல்லப்பட வேண்டும் என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். அவர் புரிந்து கொள்வார். நடுத்தர வயதின் கதவுகளைத் தட்டும் இளமைக்கே உரிய விவேகம் அவரிடம் உள்ளது.

எனவே, மதிப்பிற்குரிய விஜய் அவர்களே, இந்தச் சிந்தனைகளை உங்கள் முன் வைக்கிறேன்:

1. நீங்கள் வாக்குகளை வென்றுவிட்டீர்கள் ஆனால் சட்டசபையில் மிக முக்கியமான நம்பிக்கை வாக்கெடுப்பை இன்னும் நீங்கள் வெல்ல வேண்டியிருக்கிறது. இந்தியாவின் கூட்டாட்சி மற்றும் மதச்சார்பற்ற கட்டமைப்பைப் பாதுகாப்பதே உங்கள் முதல் முன்னுரிமையாக இருக்க வேண்டும்.

உங்களின் தலைமையிலான இந்த மாநிலம், அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பிற்கான மரியாதையை நிலைநிறுத்தட்டும். உங்கள் நாற்காலியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற பதற்றத்தில், இதில் எந்த சமரசமும் செய்து கொள்ளாதீர்கள்.

அவைக்குள் நுழையும் போது அனைத்து விதத்திலும் "விஜயாகவே" (வெற்றியாளனாக) நுழையுங்கள். ஆனால், வெறிக் கொண்டாட்டம் (Triumphalism) ஒரு நல்ல பண்பாக்இருக்காது மாறாக படிப்பறிவு மற்றும் ஆழ்ந்த ஞானமுமே சிறந்த அடையாளமாக இருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

3. நீங்கள் யாருக்குப் பின் பதவி ஏற்கிறீர்களோ, அந்த மு.க. ஸ்டாலின் அவர்கள், பெரியார் விட்டுச் சென்ற ஒரு சமூகத்தின் சிந்தனை மரபையும் பாகுபாடுகளால் பிளவுபட்ட சமூகத்தில் சமத்துவத்தைக் கொண்டு வருவதற்கான ஒரு இயக்கத்தின் தீவிர முயற்சியையும் பிரதிபலிக்கிறார். அவர் விடைபெறும்போது வெளியிட்ட அறிக்கை ஒரு தேர்ந்த அரசியல் தலைவருக்குரிய பண்பைக் காட்டுகிறது.

அவர் சட்டப் பேரவையில் இல்லாதது வருத்தத்திற்குரியது. அவரிடம் இல்லாத ஒன்று உங்களிடம் உள்ளது: அது "அப்ப ழுக்கற்றவர் என்ற அடையாளம். உங்களிடம் இல்லாத ஒன்று அவரிடம் உள்ளது, எழுதுவதற்குத் தேவையான "அனுபவம் மிக்க எழுத் தாணி" திராவிடம் எது, எது வல்ல என்ற தர்க்கரீதியான விவாதங்களுக்குள் உங்களை ஆழ்த்திக் கொள்ளாதீர்கள். அவர் உங்கள் முன்னோடி, உங்கள் வேட்டையாடுபவர் அல்ல. நீங்கள் அவருடைய பின்னோடி, அவரைப் பிடுங்கி எறிந்தவர் அல்ல. சட்டப் பேரவையில் உதய நிதி ஸ்டாலினின் இருப்பு உங்களுக்கு ஒரு "இன்னிசைப் பாடலாக" இருக்கட்டுமே தவிர, ஒரு "கொடூரமான மோதலாக" இருக்க வேண்டாம். உங்கள் இருவருக்கும் இடையிலான ஊடாட்டம் திறமைகளின் சமநிலையாக இருக்கட்டும்.

3. உங்கள் கொள்கை என்ன?" என்று உங்களிடம் கேட்கப்படலாம். அது உங்களை நிலை குலையச் செய்யாமல் இருக்கட்டும். அவர்களிடம் சொல்லுங்கள் "எனது மனசாட்சியைப் பின்பற்றுவதே எனது கொள்கை" என்று.

4. அதிகாரிகளை உங்களின் கீழ் பணிபுரிபவர்களாகப் பார்க்காமல், சகப் பணியாளர்களாக நடத்துங்கள். முகஸ்துதி செய்வது தான் சேவை என்று அவர்கள் தவறாகக் கருதக் கூடும். சர்தார் படேல் உள்துறை அமைச்சராக இருந்தபோது சொன்னது போல, அதிகாரிகள் அச்சமின்றி தங்கள் வெளிப்படையான கருத்துகளையும், பாரபட்சமற்ற ஆலோசனைகளையும் வழங்க வேண்டும் என்று கூறி அந்த எண்ணத்தை மாற்றுங்கள். மேலும்,

பதவியிலிருந்து விலகும் அமைச்சர்கள் மீதான அனைத்து விமர்சனங்களையும் ஊக்குவிக்காதீர்கள்.

இறுதியாக, முதல்வர் அவர்களே, மாநிலத்திற்குள் நல்லாட்சியையும் பொருளாதார முன்னேற்றத்தையும் நிலைநிறுத்துவதோடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு முதன்மை முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஆனால் அதையும் தாண்டி, வெறுப்பு இல்லாத, அச்சம் இல்லாத மற்றும் நீதியான இந்தியாவிற்கு ஒரு கலங்கரை விளக்கமாக நீங்கள் திகழ வேண்டும்.

இந்த கடிதத்தை ஒரு தனிப்பட்ட குறிப்புடன் முடிக்க விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தின் அரசாங்கத்திற்கு ஒரு கிறிஸ்தவர் தலைமை தாங்குவது இதுவே முதல் தடவை. இதைத் தமிழ்நாட்டின் மதச்சார்பற்ற அடையாளத்திற்கான இறைவனின் தலையீடாக, விதியின் பரிசாகக் கொண்டாடுங்கள். இந்த பாரம்பரியத்தைக் குறைத்து மதிப்பிடவோ அல்லது மறைக்கவோ யாரும் உங்களை வற்புறுத்த அனுமதிக்காதீர்கள். வள்ளுவர் கூட நீங்கள் அவ்வாறு செய்வதை விரும்ப மாட்டார்.

உங்களுக்கு வெற்றி என்பதைத் தாண்டி, ஒரு நிறைவான ஆட்சிக்காலம் அமைய வாழ்த்துகிறேன், முதலமைச்சர் அவர்களே.



**கோபாலகிருஷ்ண காந்தி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வுமனப்பான்மை தலைதூக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. விலை உயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை விட அதிகாரிகளிடம் செல்வாக்கு கூடும்.

**சிம்மம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும்.

**கன்னி**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாற்றம் உண்டாகும்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக வரும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**மகரம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**கும்பம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோகத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மீனம்**
உணர்ச்சிவசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். முயற்சிகள் பலிதமாகும்.

# ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு கிராம அபிவிருத்தியே அடித்தளம்

## யாழ். அரசாங்க அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 08

கிராமங்கள் அபிவிருத்தி அடைந்தால் மாவட்டம் அபிவிருத்தி அடையும் அதனைத் தொடர்ந்து மாகாணம் அபிவிருத்தி அடைந்து நாடு அபிவிருத்தி அடையும். ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு கிராம அபிவிருத்தியே அடித்தளமானது என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் யாழ். மாவட்ட செயலக கிராம அபிவிருத்திப் பிரிவு நடத்திய ஆடை வடிவமைத்தல் மற்றும் அழகுக் கலை மனைப்பொருளியல் உற்பத்திப் பொருட்களின் மாவட்ட கண்காட்சியும் விற்பனையும் நேற்று முன்தினம் மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட அரசாங்க அதிபர் மேலும் கூறுகையில், இந்த மாவட்ட கண்காட்சி நிகழ்வு நீண்ட காலத்துக்கு பின்னர் அதாவது 10 வருடங்களுக்குப் பிறகு நடைபெறுவது மகிழ்ச்சியான விடயம். பெண்கள் சர்வதேச ரீதியாக இன்றைய உலகில் சாதனை படைத்து வருகின்றனர். அந்த வகையில் கிராமங்களிலுள்ள பெண்கள் பொருளாதார ரீதியாக உயர வேண்டும். அதற்கு கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வரும் பயிற்சி நெறிகள் மூலம் அவர்கள் பொருளாதார ரீதியாக முன்னேற்றமடைய வேண்டும்.

மேலும், கிராமங்கள் அபிவிருத்தி அடைந்தால் மாவட்டம் அபிவிருத்தி அடையும் அதனைத் தொடர்ந்து மாகாணம் அபிவிருத்தி அடைந்து நாடு அபிவிருத்தி அடையும். எனவே ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு கிராம அபிவிருத்தியே அடித்தளமானது எனவும் தெரிவித்தார்.

இன்றைய சமூகத்தில் பெண்கள் பிரதான பங்களிப்பினை ஆற்றி வருகின்றார்கள். கல்வித் துறையிலும் சரி அரசு துறையிலும் சரி பெண்களின் பங்களிப்பு காத்திரமாக உள்ளது. கிராமத்தினையும் பெண்களின் பொருளாதாரத்தினையும் அபிவிருத்தி செய்ய வேண்டும். இதன் மூலம் அப் பிரதேசம் அபிவிருத்தி அடையும். மேலும், ஒரு மனித வாழ்க்கையில் ஆடை வடிவமைப்பு, மனப் பொருளியல் மற்றும் அழகுக்கலை முக்கியத்துவம் பெறுகின்றது. மாறி வரும் உலகில் இதன் வடிவங்களோ வகைகளோ மாறினாலும் இம் மூன்றும் மாறாது. அந்த வகையில், கிராம அபிவிருத்தித் திணைக்களம் ஒரு முதுகெலும்பாக செயல்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்தார். (எ)

# அழகுக்கலை உற்பத்தி பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் யாழில்





யாழ்ப்பாணம், மே 08

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் யாழ். மாவட்ட செயலக கிராம அபிவிருத்திப் பிரிவு நடத்திய ஆடை வடிவமைத்தல் மற்றும் அழகுக் கலை மனைப்பொருளியல் உற்பத்திப் பொருட்களின் மாவட்ட கண்காட்சியும் விற்பனையும் நேற்று முன்தினம் மேலதிக அரசாங்க அதிபர் கே. சிவகரன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அம்பலவாணர் சோதிநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

சிறப்பு விருந்தினராக கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி கஜானி பார்த்தீபன் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் விருந்தினர்களால் கண்காட்சிக் கூடங்கள் நாடா வெட்டி ஆரம்பிக்கப்பட்டு பார்வையிடப்பட்டதை தொடர்ந்து, மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அரங்க நிகழ்வு நடைபெற்றது. (எ)

# தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறீசபாரத்னத்தின் 40 ஆவது நினைவு தினம்





வவுனியா, மே 08

தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோவின் தலைவர் சிறீசபாரத்னத்தின் 40 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டது.

வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வவுனியா நகர மத்தியில் உள்ள அன்னாரின் சிலைக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனையடுத்து தனியார் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் சிறீசபாரத்னத்தின் திருவுருவப் படத்துக்குமாலை அணிவிக்கப்பட்டு தீபம் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விசா நிபந்தனைகளை மீறி தங்கியிருந்து

# நிதி மோசடிகளில் ஈடுபட்ட 78 வெளிநாட்டவர்கள் கைது

கொழும்பு, மே 08

விசா நிபந்தனைகளை மீறி நாட்டில் தங்கியிருந்து நிதி மோசடிகளில் ஈடுபட்ட வெளிநாட்டு சந்தேக நபர்கள் குழுவொன்று கைது செய்யப்பட்டது.

இவர்களில் 41 ஆண்களும் 33 பெண்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மாலை கொள்ளுப்பிட்டி, உத்தரானந்த மாவத்தை பகுதியிலுள்ள வீட்டுத் தொகுதி ஒன்றில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 19 முதல் 39 வயதுக்குட்பட்ட வியட்நாம் நாட்டவர்கள் எனவும், இது தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மேலும் 05 ஆண்களும் ஒரு பெண் சந்தேக நபரும் மாத்தறை குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

செல்லுபடியாகும் விசா இன்றி நாட்டில் தங்கியிருந்து நிதி மோசடியில் ஈடுபட்ட குற்றத்துக்காக நேற்று முன்தினம் மாலை கந்தர, தலல்ல பகுதியிலுள்ள விடுதியொன்றில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றுலா விசா மூலம் வியாபாரத்தில் ஈடுபட்டமை மற்றும் தீர்வையற்ற முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட சிகரெட்களை தம்வசம் வைத்திருந்தமை ஆகிய குற்றங்களையும் இந்த சந்தேக நபர்கள் புரிந்ததாக பொலிஸார் கூறினர். (எ)

# ஆளுங்கட்சி மாநகர சபை உறுப்பினர் இராஜினாமா

குருநாகல், மே 08

குருநாகல் மாநகர சபையின் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் பி. டபிள்யூ. பிரேமச்சந்திர தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இதற்கான கடிதத்தை அவர் நேற்று முன்தினம் கையளித்ததாக குருநாகல் நகர முதல்வர் ஆனந்த சஹபந்து உறுதிப்படுத்தியுள்ளார்.

மாநகர சபையினுள் நிலவும் முறையற்ற நிர்வாகம், மோசடி, ஊழல் மற்றும் வீண்விரயங்களை கட்டுப்படுத்த முடியாமையினால் தான் பதவி விலக தீர்மானித்ததாக பிரேமச்சந்திர தெரிவித்தார்.

இவர் குருநாகல் மாநகர சபையின் முதலாம் இலக்க கங்கொட வட்டாரத்தில் அதிக விருப்பு வாக்குகளை பெற்று தெரிவானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கீகரிக்கப்படாத வர்த்தக நடவடிக்கைகள், சட்டவிரோத கட்டுமானங்கள், முறையற்ற எரிபொருள் பயன்பாடு, முறையற்ற மேலதிக நேரக் கொடுப்பனவுகள், கடமைக்கு சமுகமளித்துவிட்டு இடையில் வெளியேறுதல் மற்றும் நகரத்தை தூய்மையாக வைத்திருக்க முடியாமை போன்ற பல்வேறு காரணங்களை முன்னிலைப்படுத்தி அவர் தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளார். (எ)

# கடந்த கால ஊழல்களை பேசிக்கொண்டு மோசடிகளை மூடி மறைக்க வேண்டாம்

## துமிந்த திஸநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மே 08

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அமைச்சர்கள் மீது சுமத்தப்படும் ஊழல் குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பது கல்லிலிருந்து பட்டை உரிப்பது போன்ற சாத்தியமற்ற காரியம் என்று பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க கூறுவது, இந்த ஆட்சியின் போலி முகத்தை அம்பலப்படுத்தியுள்ளது. அரசாங்கத்தின் சட்டபூர்வமான தன்மை இன்று கேள்விக்குறியாகியுள்ளது. கடந்த கால ஊழல்களைப் பேசிக்கொண்டு தற்போதைய மோசடிகளை மூடிமறைக்க வேண்டாம் என்று சிறீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சுதந்திர கட்சி தலைமையகத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

நாங்கள் எவ்வளவு திருடினாலும், எத்தனை விசாரணைகள் நடத்தினாலும் எங்களை குற்றவாளியாக்குவதென்பது கல்லிலிருந்து பட்டை உரிப்பது போன்று இயலாத காரியமென பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்திருக்கின்றார்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் மீது ஐந்து ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு அவை உறுதிப்படுத்தப்பட்டாலும், அவர்களைக் கண்டுபிடிப்பது கல்லிலிருந்து பட்டை எடுப்பது போன்ற கடினமான காரியம் என்பதையே அவர் கூறுகின்றார்.

நிலக்கரி ஊழல், மத்திய வங்கியின் 2.5 மில்லியன் டொலர் மோசடி அல்லது கொள்கலன் தொடர்பான ஊழல் என எதுவாக இருந்தாலும், தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர்கள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது அவற்றைச் சுமத்த முடியவில்லை.

மகிந்த ஜயசிங்க என்பவர் யார்? அவர் கூறுவது உண்மையா? என ஜனாதிபதியிடம் கேள்வியெழுப்புகின்றோம். எவ்வளவு விசாரணைகள் நடந்தாலும் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் அல்லது அரசியல்வாதிகளை கைது செய்ய முடியாது என அவர் எவ்வாறு கூற முடியும்? அவ்வாறெனில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வர உதவிய மக்களுக்கு இவர் கள் வழங்கும் செய்தி என்ன? நாங்கள் எவ்வளவு திருடினா லும், எவ்வளவு விசாரணைகள் செய்தாலும் எங்களைப் பிடிக்க முடியாது என்பதுதானா? அப் படியானால் எதற்காக ஆணைக் குழுக்களை அமைக்க வேண்டும்? - என்றார்.

# விசா பெற்றுத்தருவதாக கூறி பண மோசடி: ஒருவர் கைது!

கொழும்பு, மே 08

வெளிநாடு செல்வதற்குத் தேவையான விசா பெற்றுத் தருவதாக கூறி நபர்களை ஏமாற்றி பண மோசடி செய்தமை தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த 21 முறைப்பாடுகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மூன்று கோடியே 58 இலட்சத்து 557 ரூபாய் பணத்தை மோசடி செய்தமை குறித்து கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் பாணந்துறை பகுதியை சேர்ந்த 41 வயதுடையவர் எனவும் இவர் தனியார் நிறுவனம் ஒன்றின் பணிப்பாளர் எனவும் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (எ)




நிர்வாண காணொலியை வெளியிடுவதாக

# மிரட்டி பணம் பறிப்பு: 62 வயது பெண் கைது

குருநாகல், மே 08

நபர் ஒருவரை ஏமாற்றி அவரது நிர்வாண காணொலி பதிவுகளைப் பெற்றுக்கொண்டதுடன், அவற்றை இணையத்தில் வெளியிடுவதாக மிரட்டிப் பணம் பறித்த ஒழுங்கமைக்கப்பட்ட மோசடி கும்பலைச் சேர்ந்த 62 வயது வயோதிபப் பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமேல் மாகாண கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணைகளைத் தொடர்ந்து, இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட நபர், தனது நிர்வாண காணொலிகள் இணையத்தில் வெளியாகிவிடும் என்ற அச்சத்தில், சந்தேகநபரின் வங்கிக் கணக்கிற்கு ஒரு இலட்சம் ரூபாயை அனுப்பியுள்ளார். அதன் பின்னரே, அவர் இது குறித்து பொலிஸ் கணினி குற்றப் புலனாய் வுப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.

கைது செய்யப்பட்ட 62 வயதுடைய பெண் சந்தேகநபர், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# இதுவரையான காலப்பகுதியில் 34 இலட்சம் பேரிடம் சோதனை!

## குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 2163 பேர் கைது

கொழும்பு, மே 08

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட சோதனை நடவடிக்கைகளுக்கமைய 34 இலட்சம் பேர் இதுவரை சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளதுடன், இதன்போது பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்ட 2163 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக உதவி பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ். யு. வூட்லர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் புதன்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காகவும் விசேட சுற்றிவளைப்புகள் மற்றும் கைது நடவடிக்கைகள் என்பன தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய வேலைத்திட்டத்தின் இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் சுமார் ஒரு இலட்சத்து 87 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய கைதான சந்தேகநபர்களில் 315 பேருக்கு எதிராகக் குற்றவரும்படித் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2,740 பேர் தடுப்புக்காவலில் வைத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என அடையாளம் காணப்பட்ட 2022 பேரைப் புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த சுற்றிவளைப்புகளின் போது பொலிஸாரால் 1935 கிலோ கிராம் ஹெரோயின், 5435 கிலோ கிராம் கஞ்சா, 1989 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருள், 271 கிலோ கிராம் கொக்கைன், 430 கிலோ கிராம் குஷ்ரக போதைப்பொருள் மற்றும் சுமார் 15 இலட்சம் போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், நாட்டில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கைகளுக்கமைய 34 இலட்சம் பேர் இதுவரை சோதனைக்குட்படுத் தப்பட்டுள்ளனர். இந்தச் சோதனைகளின் போது பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்ட 2163 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 31,039 பேரும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 19,006 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது, கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களில் நீதிமன்ற நடவடிக்கைகளின் பின்னர் 1088 கிலோ கிராம் ஹெரோயின், 355 கிலோகிராம் கொக்கைன், 659 கிலோ கிராம் ஐஸ் மற்றும் 15 இலட்சம் போதை மாத்திரைகள் என்பன அழிக்கப்பட்டுள்ளன. மேலும் கடந்த 2024, 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் வெளிநாட்டில் தங்கியிருந்த 33 பேர் சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் கைதுசெய்யப்பட்டு நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்.

அவர்களில் 16 பேருக்கு எதிராக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்படவில்லை. எனினும், குறித்த நபர்களும் அந்த நாட்டு பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு இராஜதந்திர முறையில் நாடு கடத்தப்பட்டுள்ளனர். மேலும், தற்போது வெளிநாடுகளில் தலைமறைவாகியுள்ள 94 பேருக்கு எதிராக சர்வதேச பொலிஸாரால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# நீண்டகால ஒப்பந்த ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய அனுமதி

கொழும்பு, மே 08

இலங்கை அரசாங்க சேவையில் நீண்டகாலமாக தற்காலிக ஒப்பந்தம் மற்றும் பதிலீட்டு அடிப்படையில் பணியாற்றும் சுமார் ஒரு இலட்சம் ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக பொது நிர்வாகம்- மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அபயரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2019 ஆம் ஆண்டு செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் இத்தகைய அரச பதவிகளில் இணைந்து தற்போது வரை சேவையில் உள்ள 98,800 ஊழியர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்படவுள்ளனர்.

இந்தப் பணி நிரந்தரத்தை பெறுவதற்கு ஊழியர்கள் குறைந்தபட்சம் 180 நாட்கள் பணியாற்றியிருக்க வேண்டும் என்பதோடு அந்த பதவிக்குரிய கல்வி மற்றும் ஏனைய தகுதிகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியது அவசியமாகும்- என்றார். (எ)

# மாகாண கல்வி அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்

திருகோணமலை, மே 08



கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரிவுகளும் அபிவிருத்தி திட்டங்களும் தொடர்பான 2026 ஆம் ஆண்டுக்கான கொள்முதல் திட்டத்தைப் பற்றிய மறுபரிசீலனை கூட்டம் நேற்று முன்தினம் கிழக்கு மாகாண ஆளு நர் ஜயந்த லால் ரத்னசே கர தலைமையில் திருகோணமலையில் உள்ள மாகாண கல்வி அமைச் சின் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சும் அதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாகாண விளையாட்டுத் துறை, கலாசார துறை மற்றும் மாகாண முன்பள்ளி அலுவலகம் ஆகிய நிறுவனங்களின் முன்னேற்றம் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

இதில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண கல்வித் திணைக்கள மாகாண பணிப்பாளர், விளையாட்டு துறை பணிப்பாளர், மாகாண கலாசார துறை பணிப்பாளர் மற்றும் வலய கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (எ)

# திருமலை அபிவிருத்தி தொடர்பில் உயர்ஸ்தானிகர்களுடன் ஆராய்வு

திருகோணமலை, மே 08



கிழக்கு மாகாணத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் இசபெல் மார்ட்டின் மற்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானியர் அன்ட்ரூ பற்றிக் ஆகி யோர் திருகோணமலை மாநகர முதல்வர் மற்றும் பிரதி முதல்வர் ஆகியோரை நேற்று முன்தினம் திருகோணமலையில் மாநகர சபை முதல்வர் அலுவலகத்தில் சந்தித்து விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் திருகோணமலை மாநகர முதல்வர் க.செல்வராஜா, பிரதி முதல்வர் மௌசூம் மற்றும் மாநகர ஆணையாளர் உ. சிவராசா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, திருகோணமலை மாநகரத்தின் தேவைகள் எதிர்கால அபிவிருத்தி, நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

மேலும், மாநகர உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா அபிவிருத்தி, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் தொடர்பிலும் உயர்ஸ்தானியர்களின் கவனத்துக்கு கொண்டு வந்து கலந்துரையாடப்பட்டது.

# யுத்த காலத்திலும் இல்லாத தடைகள் திருமலை - கறுமலையூற்றில் ஏன்?

## ஜனாதிபதிக்கு இம்ரான் எம். பி. அவசர கடிதம்

திருகோணமலை, மே 08

திருகோணமலை, கறுமலையூற்று கடற்கரைப் பகுதிக்கு மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் செல்வதற்கு விமானப்படையினரால் விதிக்கப்பட்டுள்ள தடையானது மக்களின் அடிப்படை வாழ்வாதாரத்தையும் சுதந்திரத்தையும் பறிக்கும் செயலாகும் என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு அனுப்பியுள்ள அவசர கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள வெள்ளை மணல் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட கறுமலையூற்று கடற்கரைக்கு, பொதுமக்கள் மற்றும் மீனவர்கள் செல்வதற்கு விமானப்படையினரால் திடீர் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடையின் காரணமாக குறித்த கடற்பரப்பை நம்பி வாழ்ந்து வரும் நூற்றுக்கணக்கான மீனவக் குடும்பங்கள் தமது அன்றாடத் தொழிலை முன்னெடுக்க முடியாமல் நிர்க்கதியாகியுள்ளனர்.

முப்பது வருடகால கொடூர யுத்தம் நிலவிய காலப்பகுதியில் கூட இப்பகுதி மீனவர்களுக்கு இவ்வாறானதொரு கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை.

தற்போதைய ஜனாதிபதி, மக்களுக்கான ஒரு புதிய அரசியல் கலாசாரத்தையும், சுதந்திரமான சூழலையும் கட்டியெழுப்ப முயற்சிக்கும் இவ்வேளையில், பாதுகாப்புத் தரப்பினரின் இத்தகைய தன்னிச்சையான நடவடிக்கைகள் அரசாங்கத்தின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பதாகவே அமைகின்றன.

மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கும் இவ்வாறான செயல்பாடுகளை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது. எனவே, கறுமலையூற்று கடற்கரையில் மீனவர்கள் தமது மீன்பிடித் தொழிலை சுதந்திரமாக முன்னெடுக்கவும், பொதுமக்கள் கடற்கரையைப் பயன்படுத்தவும் விதிக்கப்பட்டுள்ள தடையை நிரந்தரமாக நீக்க ஜனாதிபதி உடனடியாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு உத்தரவிட வேண்டும்.

மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் பட்சத்தில் அதற்கு எதிராகத் தொடர்ந்தும் குரல் கொடுப்போம் என்று அவர் தனது அறிக்கையில் மேலும் வலியுறுத்தியுள்ளார். (எ)

# கிழக்கில் நில அபகரிப்பு குறித்து உயர்ஸ்தானிகர்களிடம் முறையீடு

திருகோணமலை, மே 08

கிழக்கு மாகாண நில உரிமை மற்றும் மனித உரிமை விவகாரங்கள் குறித்து இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மற்றும் கனேடிய உயர்ஸ்தானிகரை கிழக்கு மாகாண நில மீட்பு வலையமைப்பினர் திருகோணமலையில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில், கிழக்கு மாகாண நில மீட்பு வலையமைப்புடன் இணைந்து திருகோணமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் மனித உரிமை செயல்பாட்டாளர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது, கிழக்கு மாகாணத்தில் மக்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட காணிகளை விடுவிக்கக் கோரி மகஜர் கையளிக்கப்பட்டதுடன், அப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது.

மேலும், இவ்விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துடன் தாங்கள் எதிர்வரும் காலங்களில் கலந்துரையாடமுனைவதாக உயர்ஸ்தானிகர்கள் தெரிவித்தனர். (எ-12)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## 118 உறுப்பினர்களின்...

234 இடங்களைக் கொண்ட தமிழகச் சட்டப்பேரவையில் ஆட்சி அமைப்பதற்கு 118 உறுப்பினர்களின் ஆதரவு அவசியமாகும்.

தனிப்பெரும் கட்சியாகத் தவெக உருவெடுத்திருந்தாலும், தேவையான 118 உறுப்பினர்களின் ஆதரவை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தாமல் ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்க முடியாது என ஆளுநர் ஆர்லேகர் மீண்டும் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

ஆளுநரின் இந்த நிலைப்பாட்டினால், விஜயின் பதவியேற்பு நிகழ்வு மேலும் தாமதமடைந்துள்ளது. எஞ்சியுள்ள 5 உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டுவதற்காகத் தவெக தரப்பு ஏனைய கட்சிகளுடன் தீவிரப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளது.

அதேவேளை, ஆளுநரின் இந்தத் தாமதம் மற்றும் நிபந்தனைகள் குறித்து அரசியல் விமர்சகர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துகள் நிலவி வருகின்றன.

தமிழகத்தில் புதிய அரசு அமைவதில் நீடித்து வரும் இந்த இழுபறி நிலையால் அரசியல் களம் மேலும் சூடுபிடித்துள்ளது. (அ)

## சர்வதேச ரீதியில்...

செயல்படுவதாக குற்றஞ்சாட்டினார்.

குறிப்பாக, மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் மற்றும் நிதி முறைகேடுகள் தொடர்பில் எதிர்க்கட்சிகள் எழுப்பும் கேள்விகளைத் திசைதிருப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் மத்திய வங்கி ஆளுநர் மேற்கொண்டதாகக் கூறப்படும் தவறுகளுக்கு அரசாங்கம் முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும் என வலியுறுத்திய டிலான் பெரேரா, உரிய விசாரணைகள் நிறைவடையும் வரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்களது பதவிகளில் இருந்து தற்காலிகமாக விலகி இருக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, நாட்டில் நிலவி வரும் கடவுச்சீட்டு தட்டுப்பாட்டிற்கு அரசாங்கத்தின் முறைகேடான கேள்வி கோரல் நடைமுறைகளே காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஈ-கடவுச்சீட்டு அச்சிடும் ஒப்பந்தத்திற்காக விண்ணப்பித்திருந்த போலந்து நாட்டைச் சேர்ந்த நிறுவனம் உள்ளிட்ட ஆறு சர்வதேச நிறுவனங்கள் எந்த நியாயமான காரணமுமின்றி நிராகரிக்கப்பட்டதாகவும், அரசாங்கத்துக்கு நெருக்கமான ஒருவருக்கு இந்த ஒப்பந்தம் வழங்க முயற்சி நடைபெறுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். (அ)

## காணாமல் ஆக்கப்பட்டோர்...

திறன் விருத்தி நிலையத்தில் நேற்று நடைபெற்றது. இதில் உரையாற்றிய ஆளுநர், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களை அதிகாரிகள் மனிதாபிமானத்துடனும் கௌரவத்துடனும் அணுக வேண்டும் என வலியுறுத்தினார்.

ஒருவர் உயிரிழப்பதை விட அவர் எங்கு இருக்கிறார் என்பது தெரியாமல் காணாமல் ஆக்கப்படுவது குடும்பங்களுக்கு மிகக் கொடூரமான வேதனையை ஏற்படுத்துவதாகவும், அந்த வலியை சம்பந்தப்பட்ட குடும்பங்களே முழுமையாக உணர முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு கிடைக்க வேண்டிய ஓய்வூதியம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி உள்ளிட்ட நன்மைகளை தாமதமின்றி பெற்றுக்கொடுக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

“இறந்தவராகக் கருதும் சான்றிதழ்” அல்லது “காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்” என்ற சான்றிதழைப் பெறுவதால் உண்மையை கண்டறியும் விசாரணைகள் நிறுத்தப்படாது என்றும், அவை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

மேலும், செம்மணி உள்ளிட்ட பகுதிகளில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பாக தகவல்களை முறையாக ஆவணப்படுத்துவதில் கிராம அலுவலர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு முக்கிய பொறுப்பு உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய அரசாங்கம் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகளுக்கும் புதைகுழி அகழ்வு நடவடிக்கைகளுக்கும் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்கி வருவதாகவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

நிகழ்வில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் அதிகாரிகள், மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

## விஜய்யை பதவியேற்பதற்கு...

மேலும், ஆளுநரின் நடவடிக்கையை விமர்சித்துள்ள நடிகர் பிரகாஷ் ராஜ் தனது “எக்ஸ்“ தளத்தில்,

“ஆளுநரின் இச்செயற்பாடு அரசியலமைப்புக்கு முரணானது. எமக்குள்ளே அரசியல் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம், ஆனால் விஜய்க்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. சட்டசபையில் தனது பலத்தை நிரூபிக்க அவருக்கு உரிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்” எனப் பதிவிட்டுள்ளார்.

இந்த நிலையில், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், “மக்கள் த.வெ.கவைத் தனிப்பெரும் கட்சியாகத் தெரிவு செய்துள்ளனர். எனவே, குழப்பங்களுக்கு இடமளிக்காமல் விஜயைப் பதவியேற்க ஆளுநர் அனுமதிக்க வேண்டும். இதுவே முறையானது” எனத் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் ஆட்சி அமைப்பதில் ஏற்பட்டுள்ள இந்த இழுபறி நிலை காரணமாக அரசியல் களம் சூடுபிடித்துள்ளதோடு, ஆளுநரின் அடுத்த கட்ட நகர்வு குறித்து அனைவரும் ஆவலுடன் காத்திருக்கின்றனர். (அ)

## பிரைட் ரைஸ்...

உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, லாப்ஸ் எரிவாயுவைப் பயன்படுத்தி நடத்தப்படும் சிற்றுண்டிச்சாலைகளில் சாதாரண தேநீர் மற்றும் பால் தேநீரின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்துள்ளார்.

லஃப்ஸ் எரிவாயுவைப் பயன்படுத்தும் சிற்றுண்டிச் சாலைகளில் ஒரு சாதாரண தேநீரின் விலை 5 ரூபாவினாலும், பால் தேநீரின் விலை 10 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சிற்றுண்டி வகைகளின் விலைகள் 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளபோதிலும், முட்டை ரொட்டி மற்றும் பராட்டாக்களின் விலைகளில் மாற்றம் இல்லை என ஹர்ஷன ருக்ஷான் மேலும் வலியுறுத்தியுள்ளார். (அ)

## 80 கோடி ருபாவுக்கும்...

குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் தற்போதைய செயல்பாடுகளை அவர் கடுமையாக விமர்சித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிதி அமைச்சின் செயலாளரின் செயல்பாடுகளால் 80 கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் காணாமல் போயுள்ளது. இன்று டொலரின் பெறுமதி அதிகரித்துள்ள நிலையில், அந்த இழப்பு இன்னும் அதிகமாக இருக்கலாம். ஆனால், நிதி அமைச்சு, மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் இது குறித்து எந்த கவலையுமின்றி நித்திரையில் உள்ளன.

இந்த அரசாங்கம் இப்போது “ஹேக்கர்களின் அரசாங்கமாக” மாறியுள்ளது. நிலக்கரி கொள்வனவு, தனியார் வங்கி ஒன்றில் 13 பில்லியன் ரூபாய் மாயம், அஞ்சல் திணைக்களம் மற்றும் துறைமுகத்தில் கொள்கலன்கள் மாயம் என அனைத்துக்கும் ஹேக்கர்களே காரணம் என சொல்லப்படுகிறது. இப்போது ஹேக்கர் அரசியலாக மாறியுள்ளது.

ஜனாதிபதி ஒரு அரசியல்வாதி, ஆனால், நீதியமைச்சர் ஒரு சட்டத்தரணி. நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் குறித்து அரசியல் மேடைகளில் பேசுவது வெட்கக்கேடானது. நீதியமைச்சர் இது குறித்து ஜனாதிபதிக்கு அறிவுரை வழங்கியிருக்க வேண்டும்.

மணிக்கு 1000 கிலோ மீற்றர் வேகத்தில் நாட்டை நகர்த்துவோம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், இன்று ரயிலின் வேகத்தை 20 கிலோ மீற்றர் ஆகக் குறைத்துள்ளனர். மகிந்த ராஜபக்ஷவுக்குப் பிறகு ரயில்வே துறையில் எந்தவொரு முறையான நவீனமயமாக்கலும் இடம்பெறவில்லை.

அரசாங்கம் இன்று ஊடகங்களையும் சமூக வலைத்தளங்களையும் ஒடுக்குவதன் மூலம் உண்மைகளை மறைக்கப் பார்க்கிறது. இது 88, 89 காலப்பகுதி அல்ல என்பதை அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும். இன்று எதையும் மறைக்க முடியாது.

இந்த ஊழல்கள் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என்றும், இறுதியில் இந்த இழப்புகள் அனைத்தையும் நாட்டு மக்களே சுமக்க வேண்டியுள்ளது-என்றார். (எ)

## செம்மணி...

காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 10ஆம் நாள் அகழ்வு பணிகள் நேற்று நடைபெற்றன.

அதன்போது , ஏற்கனவே அடையாளம் காணப் பட்டிருந்த என்புக்கூடுகளில் இரண்டு என்புக் கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், நான்கு என்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றை சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் இதுவரையான காலப்பகுதியில் செம்மணி மனிதப் புதைகுழியில், 259 மனித என்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 254 மனித என்புக்கூட்டு தொகுதி முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, புதைகுழிக்குள் இருந்து கடந்த சில தினங்களில் மீட்கப்பட்ட மூக்குத்தி போன்ற ஆபரணங்கள், நாணயக் குற்றிகள் உள்ளிட்ட பிற பொருள்களான 14 பொருள்கள் நீதிமன்றுக்கு பரப்படுத்தப்பட்டுள்ளன. (அ)

## தையிட்டி விகாரை...

நீண்ட காலமாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். குறித்த விகாரையை அகற்றித் தங்களது காணிகளை மீள ஒப்படைக்க வேண்டும் என்பதே இவர்களது பிரதான கோரிக்கையாக உள்ளது.

நிலத்தை விடுவிப்பதற்கான முதற்கட்டமாக காணி அளவீட்டுப் பணிகளை முன்னெடுக்க மாவட்ட நிர்வாகம் பலமுறை முயற்சித்தது. எனினும், அதிகாரிகளின் செயற்பாடுகளில் நம்பிக்கை இல்லை எனத் தெரிவித்து நில உரிமையாளர்கள் எதிர்ப்பு வெளியிட்டதால், அளவீட்டுப் பணிகள் ,டைநிறுத்தப்பட்டன. இதனால் அப்பகுதியில் தொடர்ந்தும் பதற்றமான சூழலே காணப்படுகின்றது.

இவ்வாறானதொரு ,ழுபறி நிலைக்கு மத்தியில், தையிட்டிப் பகுதிக்கு நேற்று முன் தினம் மாலை விஜயம் செய்த யாழ். ஆயர், விகாரை அமைந்துள்ள பகுதி மற்றும் மக்களின் காணிகளை நேரில் பார்வையிட்டார். மக்களின் நீண்ட காலப் போராட்டம் மற்றும் தற்போதைய கள நிலவரங்கள் குறித்து இதன்போது அவர் கேட்டறிந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## தமிழக ஆளுநருக்கு...

தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்ற தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைக்க முடியாத வகையில் மத்திய பா.ஜ.க. அரசு அரசியலமைப்புக்கு எதிராக செயல்படுவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

மேலும், மத்திய அரசின் கைப்பாவையாக ஆளுநர் செயல்படுவதாகவும் அவர் விமர்சித்துள்ளார்.

சென்னை மாவட்ட காங்கிரஸ் குழுக்களின் சார்பில் சென்னை அண்ணாசாலை தாராப்பூர் டவர் அருகில் இன்று முற்பகல் 11 மணிக்கு தனது தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர்கள், முன்னாள் மற்றும் தற்போதைய காங்கிரஸ் நிர்வாகிகள், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மற்றும் வட்டார நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## நயினாதீவு அம்மன்...

பொலிஸாருக்கு ஆலய நிர்வாகத்தால் முறைப்பாடு வழங்கப்பட்டதை அடுத்து துரித கதியில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், இருவரை குறிகட்டுவான் பகுதியிலும், மற்றுமொருவரை நயினாதீவு பகுதியிலும் வைத்து கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரிடம் இருந்து உண்டியல் காசு 21 இலட்சம் ரூபாய் மீட்கப்பட்டுள்ளதாகவும் கைதான மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் , அவர்கள் 16 , 17 மற்றும் 27 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்னர். (அ)

## கபில சந்திரசேனவை...

கைதுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு எயார்பஸ் விமானங்களை கொள்வனவு செய்தபோது, இலஞ் சம் பெற்றதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள முன்னாள் நிறைவேற்று அதிகாரி கபில சந்திரசேனவின் பிணையை இரத்து செய்யுமாறு இலஞ்சம் ஊழல் விசாரணை ஆணைக்குழு நீதிமன்றத்திடம் விடுத்திருந்த கோரிக்கையைப் பரிசீலித்த பின்னர், கொழும்பு பிரதான நீதவான் அசங்க எஸ்.போதரகம இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# மீண்டும் மின் கட்டணம் உயர்ந்தால் ஏற்றுமதித்துறை முடங்கும் அபாயம்

## உற்பத்தியாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, மே. 08

இலங்கையில் "பவர் வீலிங்" எனப்படும் மின்சார விநியோக சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தாமல், ஏற்றுமதித் தொழிற்சாலைகள் மீது மீண்டும் மின்சாரக் கட்டண உயர்வைத் திணிப்பது நாட்டுக்கு பாரிய பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்தும் என ஏற்றுமதி உற்பத்தியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

குறைந்த மழைவீழ்ச்சி, நுரைச்சோலை நிலக்கரி மின்நிலையத்தின் செயலிழப்பு மற்றும் உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பு போன்ற காரணங்களால் மின்சாரத்துறையில் ஏற்பட்டுள்ள 38 பில்லியன் ரூபா நட்டத்தை ஈடுகட்ட, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இந்த வாரம் விசேட கட்டணத் திருத்தத்தை மேற்கொள்ளவுள்ளது.

இந்த நிலையில், சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் சங்கம் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில்-

அரசாங்கம் 95 வீதமான சிறிய நுகர்வோருக்கு மானியம் வழங்கியுள்ள நிலையில், 38 பில்லியன் ரூபா நட்டத்தில் சுமார் 23 பில்லியன் ரூபாயை தொழிற்சாலைகள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்களே சுமக்க வேண்டியுள்ளது.

அத்துடன், இந்தியா, வியட்நாம் மற்றும் பங்களாதேஷ் போன்ற அண்டை நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் மின்சாரக் கட்டணம் அதிகமாக இருப்பதால் சர்வதேச சந்தையில் எமது ஏற்றுமதிப் பொருள்களின் விலை அதிகரித்து, கேள்வி குறையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டின் மின்சார சட்டத்தின்படி, தொழிற்சாலைகள் நேரடியாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியாளர்களிடம் மின்சாரத்தைப் பெற்று, தேசிய மின் கட்டமைப்பைப் பயன்படுத்துவதற்கு அனுமதி உள்ளது. ஆனால், இதுவரை இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது.

ஏற்கனவே கடந்த ஏப்ரல் மாதம் 8.7 வீதக் கட்டண உயர்வு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மீண்டும் ஒரு உயர்வு ஏற்பட்டால் அது 2026ஆம் ஆண்டுக்கான ஏற்றுமதி ஒப்பந்தங்களைப் பாதிக்கும் என அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (அ)

## தனியார் பஸ் துறையில் பாரிய மாற்றம் மின்சார பஸ் சேவை விரைவில் ஆரம்பம்!

கொழும்பு, மே. 08

இலங்கையின் தனியார் பஸ் துறை எதிர்கொண்டுள்ள நிதி மற்றும் தொழில்நுட்ப நெருக்கடிகளுக்குத் தீர்வாக, மின்சார பஸ் திட்டத்தை அறிமுகப்படுத்த இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம், அம்கொட் கார்ப்பரேஷன் மற்றும் இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் ஆகியவற்றுக்கு இடையே நேற்று முன் தினம் கையெழுத்தானது.


அடுத்த இரண்டு மாதங்களுக்குள் 100 சொகுசு மின்சார பஸ்கள் இறக்குமதி செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்படும். இவை 32 ஆசனங்களைக் கொண்ட குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ்களாகும்.

ஆரம்ப கட்டத்தில் இந்த பஸ் ஹொரண மற்றும் கொழும்புக்கு இடையிலான பாதையில் இயக்கப்படவுள்ளன. சூரிய சக்தியைப் பயன்படுத்தி இந்த பஸ்கள் மின்னேற்றம் செய்யப்படவுள்ளது.

இதனை 45 நிமிடங்களில் முழுமையாக மின்னேற்றம் செய்ய முடியும். ஒருமுறை மின்னேற்றம் செய்தால் 350 கிலோமீற்றர் தூரம் பயணிக்கலாம் (ஹொரண - கொழும்பு இடையே சுமார் 6 பயணங்கள்) எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக குறித்த பாதையில் சுமார் 200 மின்னேற்ற நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. மேலும், இந்த பஸ்களுக்கு 7 வருட உத்தரவாதம் வழங்கப்படுகிறது. (அ)

## களு கங்கை பாலத்தில் விபத்து; 9 பேர் மயிரிழையில் தப்பினர்!



கொழும்பு, மே. 08

கட்டுநாயக்காவில் இருந்து கஹவத்தை நோக்கி பயணித்த வான் ஒன்று நேற்று அதிகாலை இரத்தினபுரிப் பகுதியில் அமைந்துள்ள களு கங்கை பாலத்தில் விபத்துக்குள்ளானது.

பாலத்தின் மீது கட்டுப்பாட்டை இழந்த குறித்த வாகனம் மோதியதில் அதில் பயணித்த 9 பேர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

விபத்து நேரத்தில் வாகனம் களு கங்கையில் விழுந்திருக்குமானால் பெரும் உயிர்ச்சேதம் ஏற்படும் நிலை இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவியது. இது தொடர்பாக இரத்தினபுரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## தண்டவாளத்தில் இருந்தவரை மோதிய யாழ்.-கொழும்பு ரயில்!

### முறிகண்டி பகுதியில் சம்பவம்

கிளிநொச்சி, மே. 08

கிளிநொச்சி - முறிகண்டி பகுதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற ரயில் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ரயில், தண்டவாளத்தில் அமர்ந்திருந்த குறித்த நபரை மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு சுமார் 11.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் பின்னர் ரயில் மூலம் அறிவியல் நகர் ரயில் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில், உயிரிழந்த நபரின் அடையாளம் இதுவரை உறுதி செய்யப்படவில்லை என்றும், அவரது சடலம் தற்போது கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## திறைசேரி அதிகாரியின் மரணம் குறித்து உளவியல் பிரேத பரிசோதனை வேண்டும்!

கொழும்பு, மே. 08

வெளிநாட்டு வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ரங்க நிஷாந்த ராஜபக்ஷவின் மரணம் தொடர்பில் நிலவும் பல்வேறு சந்தேகங்களைத் தீர்க்கும் வகையில்,. உடனடியாக உளவியல் பிரேத பரிசோதனை ஒன்றை நடத்துமாறு "தினன தகுண" என்ற அரசியல் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த மரணம் தற்போது நாட்டில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளதாக அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த மரணம் தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்புகள், பாரயளுமன்ற விவாதங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாக பல்வேறு முரண்பாடான கருத்துக்களும் சந்தேகங்களும் எழுப்பப்பட்டுள்ளதுடன், மிகவும் உணர்வுபூர்வமான புகைப்படங்களும் பரவி வருவதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த காலத்தில் தீர்வு காணப்படாமல் இருந்த வஸீம் தாஜூதீன் படுகொலை விசாரணையைப் போலவே, இந்த மரணமும் மிகவும் சிக்கலான ஒன்றாக இருக்கும் என அது குறிப்பிட்டுள்ளது.

உயிரிழந்த ரங்க நிஷாந்தவின் குடும்பத்துக்கு நீதி கிடைப்பதுடன், 2.5 மில்லியன் டொலர் திறைசேரி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் சுயாதீனமான விசாரணையை மேற்கொள்வதற்கு இந்த உளவியல் பிரேத பரிசோதனை மிகவும் அவசியமானது என அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## ஷிரந்தி குறித்து வதந்தி; சி.ஐ.டியில் முறைப்பாடு

கொழும்பு, மே. 08

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷவுக்குச் சொந்தமான 40 கோடி ரூபாய் பெறுமதியான வீடு என சமூக ஊடகங்களில் பரப்பப்படும் செய்தி முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது எனத் தெரிவித்து, அது தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுஜன பெரமுனவின் செயற்பாட்டாளர் பசன் கஸ்தூரி இந்த முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளார்.


அதன் பின்னர் அவர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில்- தற்போதைய அரசாங்கத்தின் ஊழல்கள் ஒவ்வொன்றாக வெளிச்சத்துக்கு வரும்போது, பாராளுமன்றத்தில் உள்ள ஆளுந்தரப்பின் 159 உறுப்பினர்களினதும் பல நரம்புகள் அதிரத் தொடங்கியுள்ளன.

ராஜபக்ஷ குடும்பத்தினருக்குச் சொந்தமான சட்டவிரோத வீடுகள் மாத்திரமல்ல, ஒரு விளையாட்டு வீடு இருப்பதாகத் தெரிந்தால்கூட இந்த அரசாங்கம் சும்மா இருக்கப்போவதில்லை. அவ்வாறான நிலையில் ஆதாரமற்ற பொய்ப் பிரசாரங்களை அரசாங்கம் முன்னெடுக்கிறது.

நீதி அமைச்சர் தனது ஆதரவாளர்களுக்கு முன்னால் நின்றுகொண்டு வாய்ப்பாடு வாசிப்பதைப் போல நீதிமன்ற வழக்குகள் குறித்துப் பேசி வருகிறார்.

இவ்வாறு அரசியல் மேடைகளில் வழக்குகளின் விவரங்களை அமைச்சர் பகிரங்கப்படுத்துவதன் ஊடாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் சுயாதீனத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை குறித்து பாரிய சந்தேகம் எழுகிறது- என்றார்.

## வேடுவத்தலைவர் காலமானார்



கொழும்பு, மே. 08

மொனராகலை மாவட்டத்தின் மடுல்ல பிரிவுக்குட்பட்ட வேடுவத்தலைவர், தானிகல மகா பண்டாலகே சுதா வன்னில அத்தோ நேற்றுக் காலமானார்.

வெலிசறை காச நோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர், தனது 62ஆவது வயதில் காலமானார். (அ)

## இலங்கையர்களின் தனிப்பட்ட தரவுகள் அடங்கிய திட்டம் இந்திய நிறுவனத்திடம்!

### அரசிடம் விளக்கம் கோருகிறது தேசிய தொழிற்சங்கம்

கொழும்பு, மே. 08

இலங்கையர்களின் தனிப்பட்ட தரவுகள் மற்றும் உயிரியளவியல் தகவல்களை உள்ளடக்கிய டிஜிற்றல் அடையாள அட்டை திட்டத்தை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு வழங்குவதற்கு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் தீர்மானம் குறித்து அரசாங்கம் உடனடியாக விளக்கமளிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய தொழிற்சங்கம் மற்றும் சிவில் முன்னணியின் அழைப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் மருத்துவர் சமல் சஞ்சீவ கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இலங்கை பிரஜைகளின் கைரேகைகள், கண்சுவடு மற்றும் இரத்த வகை உள்ளிட்ட மிக முக்கியமான தகவல்களை வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் வசம் ஒப்படைப்பது நாட்டின் பாதுகாப்புக்கும் தனிநபர் சுதந்திரத்துக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமையும் என அவர் சுட்டிக்காட்டினார்.

"இன்றைய உலகில் தரவு வர்த்தகம் என்பது ஆயுதக் கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தலை விடவும் பாரிய சட்டவிரோத வருமானம் ஈட்டும் துறையாக மாறியுள்ளது. எமது நாட்டு மக்களின் தரவுகள் சர்வதேச தரவுச் சந்தையில் விற்கப்படும் அபாயம் உள்ளது," என அவர் எச்சரித்தார்.

இலங்கையில் ஏற்கனவே சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டு, கறுப்புப் பட்டியலில் இடம் பெற்றுள்ள இந்திய நிறுவனம் ஒன்றுக்கே இந்த ஒப்பந்தம் வழங்கப்படவுள்ளதாக வைத்தியர் சமல் சஞ்சீவ குற்றஞ்சாட்டினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.05.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media